Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 306

வியாழக்கிழமை 28 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் மீட்சி பெறவில்லை!

### கடன் மறுசீரமைப்பே நிதியுதவியைத் தீர்மானிக்கும்
### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப்ரெம்பர் 28**

**இலங்கையில் பொருளாதார நிலைத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் தென்படுகின்றபோதும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. கடன்மறுசீரமைப்பே இரண்டாம் கட்ட நிதி விடுவிப்பைத் தீர்மானிக்கும்.**

»11

## தேர்தல் ஒத்திவைப்பு மனித உரிமை மீறல்!

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.28
உள்ளாட்சிச் சபை மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை மனித உரிமை மீறலாகும். அந்தத் தேர்தல்கள் »11

முள்ளிவாய்க்கால் மேற்கில் படைத்தரப்பு

## தேடியது தங்கம்; கிடைத்ததோ தண்ணீர்!

முல்லைத்தீவு, செப்.28
முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் தங்கம் மற்றும் ஆயுதங்களைத் தேடி படைத்தரப்பு மேற்கொண்ட அகழ்வில் எதுவும் கிடைக்காததால் அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் மேற்கில் விடுதலைப் புலிகள் அமைப்பால் தங்கம் மற்றும் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த 25ஆம் திகதி முதல் அகழ்வு »11



## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.28
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் நடைபெறவுள்ளது. »12

கிளிநொச்சி மருத்துவமனையில்

## கர்ப்பப்பை அகற்றத்துக்கு மருத்துவத் தவறே காரணம்!

### தருமபுரம் பொலிஸில் முறைப்பாடு

கிளிநொச்சி, செப்.28
கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தனது மனைவியின் கர்ப்பப்பை அகற்றப்பட்டமைக்கு மருத்துவத் தவறுகளே காரணம் என்று கணவரால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. »11

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்;

## ஆய்வுகளுக்காக சிறுமியின் கை கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட »11

## மாகாணத்தின் அதிகாரங்களை மத்திக்கு தாரைவார்க்கவில்லை!

### சுட்டிக்காட்டிய அவைத்தலைவருக்கு வடக்கு ஆளுநர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.28
மாகாணத்தின் அதிகாரங்களை மத்திக்குவழங்குவதைகொள்கை ரீதியாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டிய நிலையில், மாகாணத்தின் அதிகாரங்களை மத்திக்கு வழங்கும் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்று வடக்கு »11

## சட்டவிரோதக் கடற்றொழிலை கட்டுப்படுத்த நடவடிக்கைகள்

### 468 பேர் மீது வழக்குப் பதிவு

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சட்டவிரோதக் கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது சட்டவிரோதக் »12

மணல் கடத்தல்காரர்களுக்கு ஆதரவாக

## கஞ்சா வழக்குப் போடுவேன் என மிரட்டுகிறார் பொலிஸ் அதிகாரி!

### மாவட்டச் செயலகக் கூட்டத்தில் பரபரப்புக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.28
வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில், குடத்தனைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு ஒத்துழைப்புக் கொடுக்காவிட்டால் கஞ்சா வழக்குப் போடப்படும் என்று பொலிஸாரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, அது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டுள்ளது. »11

யாழில் ஓட்டோக் கட்டண விவகாரம்;

## அனுமதி பெற்ற தனியார் சேவையை தடுக்கக்கோருவது பொருத்தமற்றது!

### மீற்றர் பொருத்துவது கட்டாயம்
### யாழ். மாவட்டச் செயலர் "கறார்"

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் "மீற்றர்" பொருத்துவது கட்டாயமானது. அதேவேளை, முறையான அனுமதி பெற்று நடத்தப்படும் எந்தப் பயணிகள் சேவையையும் தடுக்கமுடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார். »12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைகளுக்கு யாழ்ப்பாணத்தில் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 28


**யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக எந்தவொரு மதுபானசாலையும் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்மானம் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தபோதிலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.**

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெல்லிப்பழையில் புதிதாக மதுபானசாலை அமைக்க எடுத்த முயற்சிக்கு பொதுமக்களின் எதிர்ப்பு காணப்பட்டமை தொடர்பில் விவாதிக்கப்பட்டபோதே வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மதுபானசாலைகள் போதுமான அளவு உள்ளன. புதிதாக அவை தேவையில்லை. எனவே எதிர்காலத்தில் அவற்றுக்கான அனுமதி வழங்குவதில்லை என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் எனக் கோரினார்.

இதில் தலையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாணத்தில் எத்தனை மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கமுடியும் என்ற ஒரு நியதி உள்ளது. அதனைப் பரிசீலித்துதான் தீர்மானிக்கமுடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் 146 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்றும் அதாவது கள்ளுத் தவறணைகளையும் சேர்த்து எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவைத் தலைவரின் கோரிக்கைகைவிடப்பட்டது. (ஒ-20)

## தியாகதீபம் திலீபனுக்கு டென்மார்க்கில் அஞ்சலி



கோபன்ஹேகன், செப். 28

தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு டென்மார்க்கில் கோர்சன்ஸ் மற்றும் கொல்பேக் நகரங்களில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஸ்கேயான் நகர மாலதி தமிழ்க் கலைக்கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் கணேச நாட்டிய ஷேத்திர மாணவிகள் வழங்கிய எழுச்சி நடனமும் இடம்பெற்றது.

அத்துடன் தியாக தீபம் திலீபனின் தியாகப் பயணம், போராட்ட வரலாறு என்பவை தொடர்பில் விளக்கப்பட்டதுடன் காலங்காலமாக மறுக்கப்பட்டு வரும் தமிழர்களுக்கான உரிமைகள், இலங்கை அரசின் இன வெறுப்பின் உச்சம் ஆகியவை குறித்தும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இறுதியாக 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடல் இசைக்கப்பட்டு 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'என்ற தமிழர்களின் தாரக மந்திரத்துடன் நிகழ்வு நிறைவுற்றது. (ச-இ)

## தொண்டு நிறுவனத்துக்கு வழங்கிய காணியை மீளக்கோரும் மக்கள்

கிளிநொச்சி, செப். 28

பொதுச்சந்தை, விளையாட்டு மைதானம் மற்றும் தபாலகம் உள்ளிட்ட பொதுத் தேவைக்காக அடையாளப்படுத்தப்பட்டிருந்த காணியை தொண்டு நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராமத்தின் வேதா குடியிருப்பிலுள்ள காணியே அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் சந்தை, ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்களுக்கு முன்னுரிமைப்படுத்தி காணியை வழங்குமாறு மக்கள் வலியுறுத்துகின்றனர்.

தமது பிரதேசத்தில் 24 குடும்பங்கள் காணிக்கு விண்ணப்பித்துள்ள நிலையில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், காணிகளை தொண்டு நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

'உயிரிழை என்னும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு விண்ணப்பித்தமைக்கு அமைவாக அந்தக் காணி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும்' என்று கரைச்சிப் பிரதேச செயலர் ஜெயகரன் தெரிவித்தார். (ஒ-113)

## அத்தியாவசிய மருந்துகள் பங்களாதேஷ் நன்கொடை

54 வகையான அத்தியாவசிய மருந்துகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க பங்களாதேஷ் அரசாங்கம் முன்வந்துள்ளது. இலங்கையில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடுத்த கோரிக்கைக்கமைய 58 ஆயிரத்து 307 அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப்பொருள்களை பங்களாதேஷ் வழங்கவுள்ளது. இந்த மருந்துத் தொகுதி இந்த வாரத்துக்குள் இலங்கை வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் நன்கொடையாக வழங்கும் இந்த மருந்துகளில் புற்றுநோய் மற்றும் சிறுநீரக சிகிச்சைகள் உட்பட மிகவும் அத்தியாவசியமான மருந்துகள் அடங்குகின்றன.

மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வாக பங்களாதேஷ் அரசுடன் நீண்டகால புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



## இனவாதம் உயிரோடிருக்கும்வரை பொதுநினைவுச் சின்னம் வேண்டாம்

### பசுமை இயக்கத்தலைவர் ஐங்கரநேசன் உறுதி

யாழ்ப்பாணம், செப். 28


ஜனாதிபதி செயலகம், போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. ஆனால், பேரினவாதம் உயிரோடிருக்கும் வரையில் அதை தமிழ் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொதுநினைவுச்சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது.

போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவில் கொள்ளும் இந்த முடிவுக்கு தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள். இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது அதனை எவ்வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங்கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவுசெய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம்பெற்று வருகின்றது. உலகை ஏமாற்றும் அரசாங்கத்தின் இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள் - என்றுள்ளது. (ம-20)



## பிரான்ஸில் எழுச்சிபெற்ற திலீபனின் நினைவேந்தல்

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எழுச்சியாக இடம்பெற்றது.

பரிஸிலுள்ள தமிழர்களின் வர்த்தக மையமான 'குட்டி யாழ்ப்பாணம்' என அழைக்கப்படும் இடத்தில் திலீபனின் திருவுருவப்படம் வைத்து அலங்கரிக்கப்பட்டு 12 நாள்களும் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

திலீபனின் இறுதிநாள் நினைவேந்தல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் நினைவேந்தலில் பங்கேற்று தீலிபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் திலீபன் பன்னிரு நாள்கள் இருந்த உண்ணாவிரதம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன் பதாகைகளும் பிரெஞ்சு மொழியில் காட்சிப்படுத்தப்பட்டன. (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

## முறைப்பாடு செய்து திரும்பும் வழியில் வாள்வெட்டு

**கிளிநொச்சி, செப். 28**

**திருவையாறு 3ஆம் பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

அன்றைய தினம் பகல் உறவினர்களுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டின் கேற், மின் விளக்குகள், பூச்சாடிகள், மோட்டார் சைக்கிள் என்பனவும் கொத்திச் சேதமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டை மேற்கொண்டு வீடு திரும்பும் வழியில் வீட்டின் உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஒ-113)

# இந்திய மீனவர்களைக் கைது செய்ய கடற்படையினருக்கு தயக்கமாம்!!!

## இப்படிச் சொல்கிறார் கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 28

சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றபோதிலும் இந்திய மீனவர்களை கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்காக பல பேச்சுகளிலும் நான் கலந்து கொண்டேன். ஆனால் சாதகமான முடிவு எட்டப்படவில்லை. அதேபோல இலங்கைக் கடற்படையினரும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் பின்னடிப்பதாகவே நான் கருதுகின்றேன்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் அங்குள்ள முதலமைச்சருடன் கலந்துரையாடி எங்கள் நிலைமையை அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றேன் - என்றார். (ஒ-27)

# 12 கோடி பெறுமதியான தங்க பிஸ்கட் கடத்தல்

## கட்டுநாயக்காவில் ஐவர் கைது

கொழும்பு, செப். 28

நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கடத்திய 4 பெண்கள் உட்பட ஐவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து நேற்றுப் புதன்கிழமை இரண்டு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோதே அவர்கள் கைதாகினர்.

அவர்களைச் சோதனையிட்டபோது 6 கிலோ எடையுள்ள நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகள் உடலிலும், பயணப்பொதிகளிலும் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் சுங்க அதிகாரிகளால் மீட்கப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் மற்றும் நகைகளின் பெறுமதி 12 கோடி 30 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களிடம் விமான நிலைய சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# கண் பரிசோதனைகள் ஞாயிறன்று ஏழாலையில்

யாழ்ப்பாணம், செப். 28

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை வடக்கு - கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பரிசோதனையில் தெரிவு செய்யப்படும் பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்படும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-66)

# 17 தமிழக மீனவர்கள் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 17பேரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்ய ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மீனவர்கள் 17 பேர் மூன்று படகுகளுடன் கடந்த 13ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி து.கஜநிதிபாலன் மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை என்ற நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

17 பேரில் இருவர் சிறுவர்களாக இருந்த நிலையில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளின் மேற்பார்வையில் அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் விடுவிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக... (ஒ-100)




**மோ**சடியள் பலவிதம்; ஒவ்வொண்டும் ஒருவிதம். அப்பிடியான புதுவித மோசடி ஒண்டு பேஸ்புக்கில நடக்கத் தொடங்கியிருக்கு. கொஞ்சம் வசதியா இருக்கிற, அடிக்கடி பார்ட்டியள் வைக்கிற படங்களை பேஸ்புக்கில போடுற ஆம்பிளையளுக்கு திடீரெண்டு ஒரு வடிவான பொம்பிளைப் பிள்ளை ஒண்டு 'ப்ரெண்ட் ரிக்குவெஸ்ட்' அனுப்பும். அவையும் ஒரு வடிவான பிள்ளை எங்களைத் தேடி இப்பிடி நட்புக்கோரிக்கை விட்டிருக்கே எண்ட புளுகத்தில, என்ன ஏதெண்டு பாக்காமல் தங்கட ப்ரெண்ட் ஆக்சிப்போடுவினம். அதுக்குப் பிறகு அந்தப் பொம்பிளை, 'என்ன செய்யிறீங்கள்?', 'சாப்பிட்டீங்களா?', 'குளிச்சிட்டீங்களா?' எண்டு அடிக்கடி மெசெஜ் போடத் தொடங்கி பிறகு 'இரவில தனிய இருக்க பயமா இருக்கு. உங்கட மெசெஜ் தான் ஆறுதலா இருக்கு' எண்ட ரேஞ்சில வந்து நிக்கும்.

இவையும் ஒரு பொம்பிளை இரவில தனக்கு மெசெஜ் பண்ணச் சொல்லுதே எண்டு, வாயில எச்சில் ஒழுக ஒழுக, விடியும் வரைக்கும் மெசெஜ் மழையாப் பொழிவினம். பேஸ்புக்கில தொடங்கின இந்த 'சட்டிங்' அப்பிடியே வட்ஸப்புக்கும் வந்திடும். பிறகு அந்தப்பிள்ளை தன்ர படம், வீடியோ எல்லாம் போடும். பதிலுக்கு இவையின்ர படம், வீடியோவும் கேக்கும். இவையும் ஆர்வக்கோளாறில தங்கட படங்கள், வீடியோக்கள் எல்லாம் அனுப்பிக் குவிப்பினம். அதுக்குப் பிறகுதான் சிக்கல் தொடங்கும்.

திடீரெண்டு ஒருநாள் அந்தப் பொம்பிளையிட்ட இருந்து ஒரு கோல் வரும். 'இனிமேல் எனக்கு மெசெஜ் போடவேண்டாம். என்ர புருசன் பாத்திட்டார். பெரிய பிரச்சினையாப் போட்டுது' எண்டு சொல்லிட்டு போனை வைச்சிடும். இவைக்கு அதுக்குப் பிறகு நெஞ்சிடி தொடங்கிடும். நாலைஞ்சு நாள் கழிச்சு, இன்னொரு கோல் வரும். 'நான் அவான்ர புருசன் கதைக்கிறன். உங்கட போட்டோ, வீடியோ எல்லாம் என்னட்ட இருக்கு. கொண்டு போய் பொலிஸில குடுத்து கேஸ் போடப்போறன்' எண்டு கடுமையா ஒராள் வெருட்டும். இஞ்சாலிப் பக்கமா இவை எவ்வளவு கெஞ்சினாலும் அதை அவன் கேக்கமாட்டான். அடுத்தநாள் இன்னொரு கோல். 'நான் பொலிஸ் கதைக்கிறன். நீங்கள் ஒரு கலியாணம் கட்டின பொம்பிளைக்கு கண்டபடி போட்டோ,வீடியோ எல்லாம் அனுப்பி மெசெஜ் பண்ணி இருக்கிறீங்கள் எண்டு கொம்ப்ளைண்ட் வந்திருக்கு. நாளைக்கு பொலிஸ் ஸ்ரேசனுக்கு வரனும்' எண்டு சொல்லச்சொல்ல இவைக்கு பேதி போகும்.

'சேர், தெரியாமல் நடந்திட்டு, நீங்கதான் ஏதும் செய்து காப்பாத்தவேணும்' எண்டு இவை கெஞ்சுவினம். 'சரி, எல்லாம் சமாளிக்கலாம். நீங்கள் நான் சொல்ற எக்கவுண்ட் நம்பருக்கு ஒரு அம்பதாயிரம் போடுங்கோ' எண்டு அந்த பக்க குரல் சொல்லும். இவையும் விழுந்தடிச்சுப் போய்ப் போடுவினம். பிறகு அந்தப் பொம்பிளையின்ர புருசன்காரன் எண்டு கதைச்சவனும் தனக்கு தனியா காசு போடச் சொல்லுவான். அவனுக்கும் காசு போடுவினம். இப்பிடி மாறிமாறி ரண்டுபேரும் எவ்வளவு வறுக ஏலுமோ அவ்வளவு வறுகிட்டுத்தான் ஓய்வாங்கள். இதைப் போய் பொலிஸில முறைப்பாடு செய்தால், தங்களுக்கு அவமானம் எண்டு ஒருத்தரும் வெளியில சொல்றேலையாம். இது அந்த மோசடிக் கும்பலுக்கு வசதியாப் போட்டுது. கிட்டத்தட்ட 50 பேருக்கு மேல இப்பிடி எச்சில் வழிய கடலை போட்டு, இப்ப ஏமாந்துபோயிருக்கினமாம். எதுக்கும் உங்களுக்கும் இப்பிடி ஏதும் நட்புக்கோரிக்கை வந்தால், அவதானமாயிருங்கோ!



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வல்லிபுர மாயவன் தேரேறி வருகிறான்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்



வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்றாகும். ஈழத்திருநாட்டை அலங்கரிக்கின்ற திருக்கோவில்களில் வடமராட்சியில் அமைந்துள்ள வல்லிபுரக் கோயில் உன்னதமான ஓர் இடத்தை வகிக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வகையில் பெருஞ்சிறப்புப் பெற்றது வல்லிபுர மாயவனது திருக்கோயில்.

**புராதன வழிபாட்டுத்தலம்**

வல்லிபுரக் கோவில் அமைந்துள்ள மணற்பாங்கான பிரதேசமும் அதன் அருகிலுள்ள கடலும் ஆலயத்துக்கு அழகூட்டி நிற்கின்றன. பருத்தித்துறைப் பிரதேசத்தின் வல்லிபுரம் பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் பெருமானின் இந்தத் திருத்தலம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மிகப் பழமைவாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

**கருவறையில் ஸ்ரீசக்கரம்**

இந்தியாவிலுள்ள ஸ்ரீரங்கத்தை ஒத்தது வல்லிபுர மாயவர் ஆலயம். சக்கரத்தை மூலக்கருவறையில் வைத்து ஸ்தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் என்னும் சிறப்பு இந்த ஆலயத்துக்கு உண்டு. இந்த அமைப்பினை நோக்குமிடத்து இந்தியாவிலுள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது. மச்ச அவதாரம் இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. பாக்கு நீரிணை ஓரத்தில் எழுந்த ஆலயம் அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்கு நீரிணை ஓரத்தில் நர்த்தனனாக எழுந்தருளி மாயவித்தைகளால் அடியார்களைக் கட்டி அவர்கள் முழுப்பேற்றினையும் அடைய வல்லிபுர மாயவனாக எழுந்தருளி அருள்பாலிக்கிறார்.

**சப்ததள இராஜகோபுரம்**

சப்ததள (ஏழு) இராஜகோபுரம் ஓங்கி உயர்ந்து பிரதம வாசலில் காட்சியளிக்கின்றது. கோபுரத்தில் காணப்படும் சிலைகளும் சிற்பங்களும் ஆலய தலவரலாற்றினையும் கிருஷ்ணனின் லீலைகளையும் தத்துவரூபமாக சுட்டி நிற்கின்றன. 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதற்கமைவாக ஆலயத்துக்குச் செல்லும்போது முதலில் தெரிவது கோபுரமாகும். அது கீழே அகன்று மேலே ஒடுங்கிக் கலசங்களிலே நிறைவுறும். அதனை தூலலிங்கமென அழைக்கின்றோம். இந்தவகையில் வல்லிபுர ஆழ்வாரின் இராஜகோபுரம் எழுபத்தொரு அடி உயரமும் ஏழு தளங்களையும் உடையதாகும். மகா விஷ்ணுவின் அவதாரச் சிறப்புகளையும் வல்லிக்கு அருள்பாலிக்கும் திருக்கதைகளையும் கிருஷ்ணனின் லீலைகளையும் மகாவிஷ்ணு சக்கரமாகும் திருக்காட்சிகள் பலதையும் சித்திரிக்கும் வண்ணமாக அமைந்த இராஜ கோபுரமாக இது காணப்படுகின்றது.

**சுதர்சன சக்கர வழிபாடு**

ஸ்ரீமத் நாராயணனுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும். இந்தப் பஞ்சாயுதங்களே நாராயணனுக்கு திவ்ய ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. நாராயணனுக்கு வைகுந்தத்தில் இருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும் பேறாகும். ஆயுதங்களாகவும் திருவடி நிலையாகவும் பட்டுப் பீதாம்பரமாகவும் படுக்கையாகவும் தலையணையாகவும் குடையாகவும் சிங்காதனமாகவும் பல நிலைகளிலும் உருவெடுத்து அடிமைப்பணி செய்வர். இப்படி சக்கரப் படையாக அடிமை செய்யும் நித்திய சூலி சுதர்சணம் எனப்படும் இவர் பஞ்சாயுதங்களின் முதன்மை பெற்றவர் என்றுமே இறைவனை விட்டுப் பிரியாத சுதர்சணமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சனமாகும். சுதர்சனச் சக்கரமானது இறைவனைப் போல் ஆதியந்தமெதுவும் இல்லாததாகும். எந்தவொரு ஆலயத்திலுமில்லாத சிறப்புச் சக்கர ஆயுதம் மூலமூர்த்தியாக எழுந்தருளி இருப்பது அரூப மூர்த்தியே. சுதர்சன சக்கரமே இன்று அழகான திருத்தேரிலே திருப்பவனியாக வருகின்ற காட்சியை வல்லிபுரத்திலே பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் தரிசிக்கின்றார்கள்.

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன்–மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடு நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.



## ஞானமுருகன் அணி போராடி வெற்றி!

யாழ்ப்பாணம், செப். 28

ஏ.ரி.எல். பிறீமியர் லீக் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஞானமுருகன் அணியை எதிர்த்து பவர் ஹிட்டர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானமுருகன் அணி 10 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கீதன் மற்றும் சயந்தன் இருவரும் தலா 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய பவர் ஹிட்டர்ஸ் அணி 10 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (ம-125)

## வென்றது ஈகிள்ஸ்!

யாழ்ப்பாணம், செப். 28

உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் ஏ.ரி.எல். பிறீமியர் லீக் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உரும்பிராய் ஈகிள்ஸ் அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

உரும்பிராய் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கானுகன் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஈகிள்ஸ் அணி 9.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று இரண்டு விக்கெட்களால் வெற்றி பெற்றது. (ம-125)

## ஈகிள்ஸ் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப். 28

ஏ.ரி.எல். பிறீமியர் லீக் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உரும்பிராய் ஈகிள்ஸ் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

உரும்பிராய் ஈகிள்ஸ் மற்றும் வயல் வூல்வ்ஸ் அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வயல்வூல்வ்ஸ் அணி 10 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிந்தீபன் 31 ஓட்டங்களையும், கபில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனுசன் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஈகிள்ஸ் அணி 8 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. சதீஸ் அதிகபட்சமாக 46 ஓட்டங்களைப் பெற்றார். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வட்டமிட ஆரம்பிக்கும் பிணம்தின்னிக் கழுகு!

ஈரானின் அதிபர் இப்ராஹிம் ரைசிக் இலங்கைக்கு வருவது உறுதியாகியிருக்கின்றது. 'உமா ஓயா' திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக, எதிர்வரும் டிசெம்பர் மத்திய பகுதியில் அவர் இலங்கைக்கு வரவிருக்கிறார். ஈரானிடமிருந்து பெற்றுக்கொண்ட உமா ஓயா அபிவிருத்தித் திட்ட உதவியால், இலங்கை அடைந்த, அடையப்போகின்ற நன்மைகளை விடவும், அந்த நாட்டு அதிபர் இப்ராஹிம் ரைசிக் இலங்கைக்கு வருவதால் நாடு எதிர்கொள்ளவிருக்கும் இராஜதந்திர நெருக்குவாரங்கள் உண்மையில் பல மடங்கு அதிகமாகவே இருக்கப்போகின்றன. ஏனெனில் இங்கு இலங்கை அமெரிக்காவை நேரடியாகப் பகைக்கத் தலைப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் பெரு விரிசல் ஏற்பட்டுள்ளது. அணுவாயுதங்களுக்குத் தேவையான யுரேனியத்தைச் சட்ட விரோதமாகச் செறிவூட்டுகின்றது என்று தெரிவித்த அமெரிக்கா ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது திணித்து வைத்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், ஈரானிய இராணுவத் தலைவர்களை இலக்குவைத்துக் கொலை செய்யுமளவுக்கு இந்த விடயத்தில் அமெரிக்கா அதிதீவிரமாக இயங்கி வருகின்றது. ஈரானின் போர்த்தந்திரி என்று அறியப்படும் சுலைமானி அமெரிக்காவின் ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டமைகூட இதே பின்புலத்தில்தான். இதனால் எந்தநாடுகள் எல்லாம் ஈரானை ஆதரிக்கின்றனவோ – அணுகுகின்றனவோ – தூதரக உறவுகளை ஈரானுடன் வலுப்படுத்துகின்றனவோ அவற்றை 'தீட்டுநாடுகளாக' கருதி தன் நட்பு வட்டாரத்துக்குள் இருந்து தொலைதூரத்தில் அமெரிக்கா தள்ளியே வைக்கும். உலக அரசியலில் அண்மைய நகர்வுகள் பலவும் அதையே கட்டியம் செய்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் இலங்கைக்கு வரவிருக்கின்றமை சாதாரணமாகக் கடந்துபோகக்கூடிய நாளாந்தச் செய்தியல்ல.மிகப்பெரிய ஆபத்தை இந்தப் பயணம் இலங்கைக்கு உண்டுபண்ணக்கூடியது.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் பிராந்திய வல்லரசான இந்தியா மற்றும் சீனாவின் கடல்சார் மற்றும் புவியியல் தலையீடுகள் நாளுக்குநாள் தீவிரமாகிக்கொண்டே வருகின்றன. இந்தியாவின் பக்கமாகச் சாய்வதா? சீனாவின் பக்கமாகச் சாய்வதா? என்ற தீர்மானத்தில் இருதலைக்கொள்ளி எறும்பாகப் பரிதவிக்கின்றது இலங்கை. இப்போதும்கூட சீன ஆய்வுக் கப்பலொன்றின் வருகை இலங்கையில் சர்ச்சையாகியிருக்கின்றது. கப்பல் வருவதை கடுமையாக எதிர்க்கின்றது இந்தியா. கப்பலை நங்கூரமிட்டே ஆவது என்ற முனைப்பில் தீவிரம் காட்டுகின்றது சீனா. இதனால் வேறு வழிகள் இல்லாமல் பாதுகாப்புத் துறையை வைத்து ஒரு நாட்டையும், வெளிவிவகாரத்துறையை வைத்து இன்னொரு நாட்டையும் குளிர்வித்துக் கொண்டிருக்கின்றது கொழும்பு. சீனா, இந்தியா இடையிலான பிராந்திய மோதலுக்கே இவ்வாறானநிலையென்றால், ஈரான், அமெரிக்கா போன்ற நாடுகளும் இந்தத் தீவில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தால் இலங்கையின் எதிர்காலம் மீண்டெழ முடியாத இருண்ட பக்கங்களால் சூழப்படவே செய்யும்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் என்பது தூதரக இராஜதந்திர விவகாரம் அல்ல. இது முழுக்க முழுக்க ஆயுதங்களை மையப்படுத்தியது. ஈரானுடன் புதுப்பிக்கத்தக்க சாத்தியங்கள் அல்லாமல் உறவை முறித்திருக்கின்றது அமெரிக்கா. சீனா – அமெரிக்கா விவகாரம் போன்று ஈரான் அமெரிக்கா விவகாரத்தை இலங்கை அணுக முடியாது – அணுகவும் கூடாது. அமெரிக்கா என்னும் பிணம்தின்னிக் கழுகு இலங்கையை நோக்கி தன் கடைக்கண்ணைத் திருப்பினால் அதிலிருந்து மீண்டுவரும் திராணியும் பொருளாதாரப் பலமும் இலங்கையிடம் இப்போதைக்குக் கொஞ்சமும் இல்லை. அதிலும் சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய நாடுகள் சபை, உலக சுகாதார ஸ்தாபனம், யுனிசெப் போன்ற சர்வதேச அமைப்புகளும் கடன்பெறுகைக் களங்களும், ஜோ பைடனின் ஆட்சியில் மீண்டும் அமெரிக்காவை மையப்படுத்தியே சுழன்றுகொண்டிருக்கும் நிலையில் இலங்கையின் ஈரான் அதிபரை கால்பதிக்கவைக்கும் நடவடிக்கை இராஜதந்திர அறிவை சூனியத்துக்குள் வைத்திருந்து அணுகும் நிலையே அன்றி வேறில்லை.

## நாளொரு நல்வார்த்தை

அசட்டுத்தனங்கள் பல கொண்டதுதான்
இந்த உலகமாக இருக்கிறது;
அதில்தான் சுவாரஸ்யமும் இருக்கிறது.

– கி.ராஜநாராயணன்




# இந்தியாவுக்குள்ள முதுகெலும்பு இலங்கைக்கு இல்லை

## மொட்டுக் கட்சி சாடல்

**கொழும்பு, செப். 28**

**கனடாவுக்கு எதிராக முதுகெலும்புடன் இந்தியப் பிரதமர் இன்று எடுத்த முடிவுபோல் அன்று இலங்கையும் எடுத்திருக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

எவ்வித ஆதாரமும் இன்றி மஹிந்த ராஜபக்ச மற்றும் சில படையினரை கனடா போர்க்குற்றவாளிகளாக அறிவித்தது. இதற்கு தூதுவரை அழைத்து இலங்கை தரப்பில் ஆட்சேபனை மட்டுமே தெரிவிக்கப்பட்டது. இந்தியா மீது குற்றஞ்சாட்டிய கனடாவுக்கு எதிராக அந்நாடு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. கனடா அதிகாரி வெளியேற்றப்பட்டுள்ளார். பிரதமர் மோடி முதுகெலும்புடன் செயற்பட்டுள்ளார்.

எமது நாட்டு வெளிவிவகார அமைச்சின் கருத்துச் சரியானது. அது அரசின் நிலைப்பாடு. இந்தியா இன்று எடுத்த நடவடிக்கையை இலங்கை அன்று எடுத்திருக்க வேண்டும். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் சுயாதீன நாடாகும். எனவே. உள்விவகாரங்களில் தலையீடுகள் இடம்பெறக் கூடாது - என்றார். (ஒ-44)

கனடா - இந்தியா விவகாரம்

# அலி சப்ரியின் கருத்து அரசாங்கத்தின் கருத்தே

கொழும்பு, செப். 28

கனடா தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி வெளியிட்ட கருத்து உண்மையே. அரசின் நிலைப்பாட்டையே அவர் பிரதிபலித்துள்ளார் என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.சந்திரசேன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் போர் இடம்பெற்றபோது பயங்கரவாதத்துக்கு உதவும் வகையிலேயே கனடா செயற்பட்டது. இன்றும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் வகையிலேயே அந்த நாடு செயற்படுகின்றது. இலங்கை இறைமையுள்ள சுயாதீன நாடு. எனவே, தேவையற்ற தலையீடுகளை நாம் அனுமதிக்கப்போவதில்லை. இந்தியா பக்கமோ, கனடா பக்கமோ அல்ல. இலங்கை அணிசேரா கொள்கையை பின்பற்றும் நாடு. ஆனால் கனடா விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சர் உண்மையையே வெளிப்படுத்தியுள்ளார். வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்பு என்பது அரசின் அறிவிப்பாகவே கருதப்படும்' என்றார்.

காலிஸ்தான் போராளிகள் கனடாவில் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியா மீது கனேடியப் பிரதமர் ட்ரூடோ குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார். இந்த நிலையில் ட்ரூடோ ஆதாரமற்று குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர். இலங்கை விவகாரத்திலும் அவர் அதையே செய்தார் என்று அலி சப்ரி நேற்றுமுன்தினம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

**நாளை** 29.09.2023 வெள்ளிக்கிழமை புரட்டாதி 12

சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிகாலமைப்புச் சீரில்லை: குடியிருப்புக்குள் வெள்ளம்

## கட்டடப்பிராய் மக்கள் அவதி

**யாழ்ப்பாணம், செப். 28**

**இருபாலை, கட்டப்பிராய் - மூன்றாம் கட்டை மதகினூடாக வடிந்தோடும் வெள்ளநீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து தேங்கி நிற்பதால் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் ரீ. என்.சூரியராஜா தலைமையில் இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் சுட்டிக்காட்டப் பட்டது.

கல்வியங்காடு சிங்கராஜர் வீதி மூன்றாம் கட்டை மதகின் ஊடாக வேறு பிரதேசங்களிலிருந்து நுழையும் வெள்ளநீர் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் தேங்கி நிற்கின்றது.

சீரான வடிகாலமைப்பை ஏற்படுத்தி மழைநீர் வடிந்தோட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலந்துரையாடலில் அந்தப்பகுதி குடியிருப்பு மக்கள் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து மழை வெள்ளம் வடிந்து ஓடாது தேங்கி நிற்கும் குடியிருப்புப் பிரதேசங்களுக்கு உதவிப் பணிப்பாளர் நேரில் சென்று ஆராய்ந்தார். குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமூக அமைப்பு பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார். (ச-இ)



# எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு

**கிளிநொச்சி, செப். 28**

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த திங்கட்கிழமை பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் துஷ்யந்தன் பங்கேற்று கருத்துரையாற்றினார்.

"பருவகாலப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. எலிக்காய்ச்சல் தொற்று எலிகளின் சிறுநீர் கால்வாய் நீருடன் கலக்கும்போது விவசாயிகளுக்கு பரவுகிறது.

நோய்க்கான உரிய சிகிச்சை உரிய நேரத்தில் பெறாது விடின் அங்கச் செயலிழப்புகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழலாம்.

அதற்கமைய வயலில் எலிகளைக் கட்டுப்படுத்தும் வகையில், எலிகளை வேட்டையாடும் பறவைகள், ஊர்வன ஆகியவற்றின் வரவை அதிகரிக்கும் வழிகளைக் கையாளுதல், வரம்பை அண்டிய புற்றுக்களை அகற்றுதல், முழங்கால் வரை மூடிய நீர்கசியாத காலணிகள் மற்றும் கையுறைகளை அணிதல், நோய் பரவுகின்ற பகுதியிலுள்ளோர் முற்பாது காப்புக்கான மருந்துகளை உரிய மருத்துவ ஆலோசனையுடன் பெறுவது உள்ளிட்ட முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் பின்பற்றவேண்டும்" என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச-9)

# குருபூசையும் சொற்பொழிவும்

**யாழ்ப்பாணம், செப். 28**

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமர் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையை தொடர்ந்து சொற்பொழிவை இளஞ் சைவப்புலவர் செ. க. கயிலைவாசன் 'சிவனடியார் யார் எப்பொழுது வரினும் அவர்களுக்கு உணவளிப்பதைப் பெருங் கடப்பாடாகக் கொண்ட நாயனார்' எனும் விடயபொருளில் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச)

### சாவகச்சேரியில்

# மக்கள் கருத்தறியும் கூட்டத்தில் மக்கள் முன்மொழிவுகள் மறுப்பு

**யாழ்ப்பாணம், செப். 28**

சாவகச்சேரி பிரதேசசபையின் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்ட வெளிப்படுத்துகைக் கூட்டத்தில் மக்கள் முன்மொழிந்த வேலைத்திட்டங்களை பிரதேசசபை ஏற்க மறுத்த நிலையில் மக்கள் ஏமாற்றத்துடன் சென்றுள்ளனர்.

2023 - 2024 ஆம் ஆண்டுகளில்மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மக்கள் கருத்தறியும் கூட்டம் சாவகச்சேரி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதில் 2021 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட மக்கள்பங்கேற்பு அபிவிருத்தித் திட்ட முன்னுரிமைப் பட்டியலிலிருந்து கைதடி உப அலுவலகக் கட்டடம் அமைத்தல், கச்சாய் உப அலுவலகக் கட்டடம் அமைத்தல், வரணி ஆயுள்வேதக் கட்டடம் அமைத்தல், செல்வநகர் வடிகால் அமைப்பு (ஜே/294), வரணி பொது நூலக வளாகத்தில் சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் சாவகச்சேரி பிரதேசசபை யினரால் முன்னுரிமைப்படுத்தப் பட்டன.

கூட்டத்துக்கு வந்திருந்த சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் அவற்றை ஏற்றுக்கொள்ளாது வீதி வேலைத்திட்டங்களை முன்மொழிந்தனர்.

ஆனால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில், வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமைப்படுத்தப்படவில்லை எனக் கூறப்பட்டது. அதையடுத்து இந்தக் கூட்டத்துக்கு வந்த மக்கள் ஏமாற்றத்துடன் சென்றனர். (ச-159)





# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவம்!

**யாழ்ப்பாணம், செப். 28**

வரலாற்றுச் சிறப்புமிக்க, வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான்ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில் சிறப்புத் திருவிழாக்களாக 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாம்புத் திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை கப்பல் திருவிழாவும், முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், இரண்டாம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், மூன்றாம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தமும், நான்காம் திகதி புதன்கிழமை பட்டத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-27)

# பாடசாலை மாணவர்களுக்கு வீட்டுத்தோட்ட விழிப்புணர்வு

## சுன்னாகத்தில் முதற்கட்டம்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சேதன வீட்டுத்தோட்ட செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலும் எதிர்கால சந்ததியினர் நஞ்சற்ற இயற்கையான உணவைப் பெறும் வகையிலும் விவசாயப் போதனாசிரியர்களால் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கடந்த வாரம் சுன்னாகம் விவசாயப் போதனாசிரியர் ப.மீனலோஜினி பங்கேற்று இயற்கை விவசாய செயற்பாட்டு உத்திகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இதன்போது வீட்டுத்தோட்டம் செய்வதற்கான இடத்தெரிவு, வீட்டுத்தோட்டத்தில் பயிர்த் தெரிவு, பண்படுத்தல் மற்றும் சிக்கன நீர்ப்பாசன உத்தி, இயற்கை நாசினிப் பயன்பாடு, மண்புழு திரவ உரஉற்பத்தி என்பவை பற்றி செயல்முறையுடன் கூடிய விளக்கங்கள் அளிக்கப் பட்டன.

நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த விவசாய பாட ஆசிரிய ஆலோசகர் ப. அருந்தவம் மற்றும் தொழில் முனைவுடன் கூடிய பாடசாலை நிகழ்ச்சித் திட்ட வளவாளர் எஸ். சிவகரன், மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பம் திருட்டு

பளை, செப். 28

பளை, இந்திரா புரம் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யால் வீதியோரத்தில் நடப்பட்டிருந்த பேருந்துத் தரிப் பிட அடையா ளக் குறிப்புக் கம்பம் இனந்தெ ரியாதோரால் திருடப்பட்டுள் ளது. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கவனமெடுத் துள்ளதுடன் இது தொடர் பில் மேலதிக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. (ம-9)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 30 . 10 . 1939



மறைவு 26 . 09 . 2023

யா/யூனியன் கல்லூரி 96 A/L பழைய மாணவன்

**திரு.ஆறுமுகநாதன் ஜனார்த்தனன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### திரு.சரவணமுத்து ஆறுமுகநாதன்

அவர்கள் கடந்த (26.09.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*பிரிவுத் துயர் பகிரும்...*

**யா/யூனியன் கல்லூரி**

**நண்பர்கள் குழு (96 உயர்தரம்)**

(CS 26363)A-1

## வவுனியா வடக்கு பிரதேசசபை,நெடுங்கேணி

## கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடையை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

***கேள்வி அறிவித்தல் அட்டவணை***

| இல | கடை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல 1 | 2,000.00 | 10,000.00 | 10,80,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 2023.10.02 - 2023.10.16 பிற்பகல் 1.30 வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் - 2023.10.16 பிற்பகல் 02.00 மணி வரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் - 2023.10.16 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி நியந்தனைகள்**

01. **வவுனியா மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.**
02. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு **"செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2023.10.16 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைகக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் **"தவறுனராகக்"** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப் படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தவறுனராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப் படும்.
05. **தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை 2023.10.31 ஆம் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.**
06. **கடைக்கான மாதவாடகையாக 4500.00 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் வாடகைத் தொகை காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும்.**
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக் கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக் கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. **குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, நாவிதன் கடை, சலவைத்தொழில் போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.**

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200 மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்

**செயலாளர்,**

**வவுனியா வடக்கு பிரதேச சபை,**

**27.09.2023**

(cr.40658) (N.1)


## விதைநெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிவிளைச்சலைக் கொண்ட B. G.34.6 இன மூன்றரை மாத விதைநெல் விற்பனைக்குண்டு.

**077 659 2044**


## வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோயில் வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2023

- **இடம் :- ஆலய மண்டபம்**
- **நாள் :- 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் :- பிற்பகல் 3.00 மணி**

- பிரேரணைகள் ஏதும் இருப்பின் 10.10.2023 செவ்வாய்க்கிழமைக்கு முன் செயலாளரிடம் ஒப்படைக்கவும்
- அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக் கும் படி இறையன்புடன் வேண்டுகின்றோம்.

**கௌரவ செயலாளர்,**
**ஆலய பரிபாலனசபை.**

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ். போதனா வைத்தியசாலை வாகன தரிப்பிடத்தில் மாலை 5.30 - 6.00 மணி அளவில் தாவடி வடக்கு, காளி கோவிலடி, கொக்குவிலை சேர்ந்த சண்முகம் தியாகராஜா என்பவரது (661903724 V) தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், Insurance, Tax என்பன தவறவிடப்ப ட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவம்.

**077 187 3469**

## பெயர் மாற்றம்

மல்லாகம் குப்பிளான் வீதி, ஏழாலை கிழக்கு, ஏழாலையில் வசிக்கும் **கோ.தர்மினி** ஆகிய நான் எனது பெயரை **சாராள் தர்மினி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சாராள் தர்மினி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**சாராள் தர்மினி**

(cs.52291).(N.1))

## கண்ணீர் அஞ்சலி



சங்கத்தின் உறுப்பினர்

**திரு. மு.சிறீதரன்**

அவர்களின் பாசமிகு தந்தையார்

**விநாசித்தம்பி முருகேசபிள்ளை**

அவர்கள் நேற்று (27.09.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை**

(CR 40675)A-1


## மணமகள் தேவை

01. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1984, சுவாதி, BSC, Bussiness Management,UK மணமகனுக்கு மணமகள் தேவை.
02. மீசாலை, இந்து, கௌரவகுலம் (V), 1988, சதயம், MSC Engineering, Uk மணமகனுக்கு மணமகள் தேவை.
03. பண்டத்தரிப்பு, இந்து, கௌரவகுலம் (V), 1985, பரணி, Receptionist (Hospital), Germany, vegetarion, divorce மணமகனுக்கு மண மகள் தேவை.
04. திருகோணமலை, இந்து, கௌரவகுலம் (V), 1984, ரேவதி, Qualified Draftman,Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை.
05. கரம்பன் Jaffna Town, இந்து, கௌரவகுலம் (V), 1988, ரோகிணி, BSC Engineering, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
06. மண்டைதீவு - கோண்டாவில் , இந்து, கௌரவகுலம் (V), 1989, மூலம், MBBS Doctor, மணமகனுக்கு மணமகள் தேவை.
07. கோண்டாவில் - கல்வியங்காடு இந்து, கௌரவகுலம் (V), 1990, ரேவதி, PHD in Engineering அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1988, உத்தரம், BSC Engineering அமெரிக்கா மணமகனுக்கு மணமகள் தேவை.
09. அளவெட்டி - சங்கானை இந்து, விஸ்வகுலம், 1984, திருவோணம், BSC Engineering லண்டன் மணமகனுக்கு மணமகள் தேவை.

**S.Sharma J.P Astrologer** **Whatsapp - 077 803 8193** **Phone - 077 539 3728**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரத்தில் இன்று புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், செப். 28

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பதின் நான்காவது நிகழ்வு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று தொடக்கம் ஒக்ரோபர் முதலாம் திகதி வரையான நான்கு நாள்கள் இந்த அரங்க விழா இடம்பெறவுள்ளது. இன்று மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள புத்தக அரங்க விழாவின் முதல்நாள் நிகழ்வாக, பிரபல எழுத்தாளரும், அதிபருமான திருச்செல்வம் தவரத்தினத்தின் 'வீரமும் விவேகமும்' என்ற சிறுவர் கதை நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் ஆய்வாளருமான கலாநிதி. ந.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும் தேசிய கல்வி நிறுவகத்தின் ஓய்வுநிலை விரிவுரையாளருமான திருமதி ராணி சீதரனும், நூல் மதிப்பீட்டுரையை ஆசிரியரும் ஆய்வாளருமான திருமதி பங்கயச்செல்வி யோகநாதனும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில், க.சத்திய சீலனின் நெறியாள்கையில் 'எலியார் எங்கே போனார்?' சிறுவர் நாடகமும், 'கோமாளிகள்' ஆற்றுகையும், இளையோர் பேரவையின் தயாரிப்பில், கனிஷ்ரனின் நெறியாள்கையில் 'சிறுவர் அரங்காற்றுகையும்' இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 • 06 • 1951



இறப்பு 26 • 09 • 2023

### திரு. இராமநாதன் சிவஞானசுந்தரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் - நெல்லியடி)

கொம்பாகோடை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் 61/3, குறுக்குத்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சிவஞானசுந்தரம்பிள்ளை (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் - நெல்லியடி) கடந்த (26.09.2023) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் வள்ளியம்மை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரி (செல்வி - ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜயந்தன் (Engineer - USA), டிலானி (Doctor), நிரோசன் (Telecom - Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜன் (Doctor) அவர்களின் அன்பு மாமனாரும், தஷ்வின் அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், தெய்வானை, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரமூர்த்தி (கனடா), சுந்தரலிங்கம் (கொக்குவில்), சுந்தரசிவம் (கொழும்பு), ஆராவமுதன் (லண்டன்), ஆனந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
செல்வி - மனைவி - 077 6365974
கயன் - மருமகன் - 077 392 3985

தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி தங்கம்மா கனகசபை

தோற்றம் 08.02.1934 — மறைவு 25.09.2023

சாரங்கா நகைமாடத்தில் பணிபுரியும் **கருணாநிதியின்** பாசமிகு தாயாரும், எமது நகைமாடத்தின் நீண்டகால வாடிக்கையாளராகிய **முருகையாவின்** அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உரிமையாளரும் சக ஊழியர்களும்
157/1, சாரங்கா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CR 40873) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 • 03 • 1939



மறைவு 27 • 09 • 2023

### விநாசித்தம்பி முருகேசபிள்ளை

யாழ்ப்பாணம் தென்மராட்சி அல்லாரை தெற்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி முருகேசபிள்ளை அவர்கள் நேற்று (27.09.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருவாளர் ஆறுமுகத்தின் அன்புச் சகோதரனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சிறீதரன் (பிரதேச சபை பச்சிலைப்பள்ளி), சேந்தன் (லக்சுமி ஹாட்வெயார், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தீபா (பிரதேச செயலகம், தென்மராட்சி), கலைவாணி (பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி), மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்சன், ஷர்மி, மகரண், தர்மிகன், கஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கச்சாய் எறியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.
077 948 9824 (கேதீஸ்வரன்)
077 470 2765 (சிறீதரன்)
077 6678 1[illegible] (சேந்தன்)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 • 07 • 1934



இறப்பு 25 • 09 • 2023

### கணபதிப்பிள்ளை கதிரவேலு

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரவேலு கடந்த (25.09.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராமசாமி, கந்தையா, மாசிலாமணி, பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் கதிர்காமநாதன், ஜெயகௌரி, ஜெயலக்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அற்புதம் (ராணி), சுதர்சனன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகம்மா, சிவபாக்கியம், செல்லத்துரை, வேலாயுதப்பிள்ளை, வேலுப்பிள்ளை, செல்வராஜா, சிவகுரு ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும், பிரவீன், சாம்பவி, தான்யா, டன்வின், சபிர்னா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ராசாத்தி வீதி, மாதகலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
ராசாத்தி வீதி, மாதகல்.
077 275 2319

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1971 — மறைவு 27 . 09 . 2023



## கனகரத்தினம் சுபாஸ்கரன்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கண்ணாபுரம் நாவாந்துறை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுபாஸ்கரன் நேற்று (27.09.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கேமலதாவின் அன்புக் கணவரும், நிலோஜினி, பிதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிங்சிலியின் பாசமிகு மாமனாரும், தவமலர், அம்பிகைமலர், செல்வசக்தி, சிவசக்தி, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணாபுரம் நாவாந்துறை,
யாழ்ப்பாணம்,
076 333 3177, 076 036 3908

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1975 — மறைவு 20 . 09 . 2023



## திருமதி பொன்னுத்துரை திசாந்தினி

(நீதித்துறை நிபுணர் L'EST பட்டதாரி, கல்வியாளர், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரஞ்சு, தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர், சமூக ஆர்வலர் France - Torcy மாநிலத்தில் தமிழர்களுக்கான முதன்முதல் தமிழ் பாடசாலை உருவாக்கியவர் )

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் (Torcy) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திசாந்தினி பொன்னுத்துரை கடந்த (20.09.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி தியாகராஜா சிறிரங்கநாயகி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு.பொன்னுத்துரை மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரை பங்கிராஸ் (ரஞ்சன் - பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு மனைவியும், பிரதீஸ் (France), நிதாப்பிரி (UK) ஆகியோரின் சகோதரியும், தம்பையா, சரஸ்வதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின பூதவுடல் Crematorium des Joancherolles Villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France எனும் முகவரியில் எதிர்வரும் (03.10.2023) செவ்வாய்க்கிழமை 9.00 a.m. தொடக்கம் 12.00p.m வரை ஆராதனைகளும் கிரியைகளும் நடைபெற்று, அதன்பின் அதே முகவரியில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கணவர் - ரஞ்சன்
(0033 7816 80019)
சகோதரன் - பிரதீஸ்
(0033 6509 55986)

தகவல்:
குடும்பத்தினர்
தம்பையா - பரமேஸ்வரன்
(மாமா - 074 300 8734)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1948 — மறைவு 26 . 09 . 2023



## விக்கிரமசிங்கம் செல்வராசா

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - தொழில்நுட்ப கல்லூரி)

மட்டக்களப்பு அன்னமலையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கிரமசிங்கம் செல்வராசா அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விக்கிரமசிங்கம் சௌந்தரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அமரர் தேவராணியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற அரசம்மா மற்றும் பத்மாவதி, சிவபதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் சோதிமலர், கமலேஸ்வரி, குணவதி, சிவபரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2023) முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 2405
077 601 3935

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1938 — இறப்பு 26 . 09 . 2023



## கந்தையா பாலசிங்கம்

நுணாவில் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், 10ஆம் கட்டை ஒழுங்கை மாவிட்டபுரம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது 4ஆம் ஒழுங்கை, சாந்தசோலை வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் அவர்கள் கடந்த (26.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (நுணாவில்), யோகராசா (காலஞ்சென்றவர்), பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி (வவுனியா), இராசா (காலஞ்சென்றவர்), நவரட்ணம் (சிறுப்பிட்டி), திருநாவுக்கரசு (சுன்னாகம்) ஆகியோரின் மைத்துனரும், பாலகுமார் (ஆசிரியர், வவுனியா. வ/வ.த.ம.ம.வி), ஜெயக்குமார் (கனடா), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைவாணி (ஆசிரியை, வ/வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ராஜி (கனடா), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியபிரனாத், அனக்ஷன், அக்ஷய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (4ம் ஒழுங்கை, சாந்தசோலை வீதி, மகாறம்பைக்குளத்தில்) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

4ம் ஒழுங்கை, சாந்தசோலை வீதி,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
077 620 7945
077 158 7105

(CS 26395) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபை வதிரி முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலய முன்றி லில் வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளர் க.கம்ஸநாதன் தலைமையில் இடம்பெற்றது. (ம-159)



யாழ். மாவட்ட சமுர்த்திப் பயனாளிகளது பிள்ளைகளின் மாவட்ட கலை இலக்கியப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியா லயத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர் அ.ஆனந்தராசா, யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-125)

# சீரமைப்பற்ற நிலையில் சங்கரத்தை – நவாலி வீதி!

## புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை


**யாழ்ப்பாணம், செப். 28**

**வட்டுக்கோட்டை - சங்கரத்தைச் சந்தியிலிருந்து துணவி ஊடாக நவாலி செல்லும் 786ம் இலக்கப் பேருந்து வழித்தட வீதி, மிகப் பெரிய பள்ளங்கள், குழிகள் நிறைந்து காணப்படுவதால் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில்,

இந்த வீதி நீண்டகாலமாக புனரமைப்பின்றி குண்டும் குழியும் நிறைந்து சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியை அதிகளவான மக்கள் நாளாந்த தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பொதுத் தேவைகளுக்காக அதிகளவானோர் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். அத்துடன் வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு பூதவுடல்களை கொண்டு செல்வதற்கும் இந்த வீதியே பயன்படுத்தப்படுகிறது. எனவே மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்பு இந்த வீதியை தற்காலிகமாகவேனும் சீரமைப்புச் செய்து தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச)



## குடமுழுக்கு

யாழ். செப். 28

சுதுமலை திருலிங்கேச்சரம் மரகதவல்லித் தாயார் உடனுறை கயிலைநாதர் ஆலய திருக்குடமுழுக்குப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிமுதல் முற்பகல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ம-66)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் இந்திராணிஅம்மா

**தோற்றம் : 29.03.1945** **மறைவு : 27.09.2023**

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு, வவுனியா, ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டு திட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் இந்திராணி அம்மா நேற்று (27.09.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும். சோமநாதன். புஸ்பராணி. சிவகுமார். சிவகரன். செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும். சிவமணி. சர்வானந்தராஜா. நாகரூபி. கோமளேஸ்வரி. வரதராசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் ஓமந்தை வேப்பங்குளம் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் ஓமந்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மக்கள், மருமக்கள்.

**தகவல்: திரு.சி.சோமநாதன்,**
**VC, அரச ஊழியர் வீட்டுத் திட்டம்,**
**வேப்பங்குளம் ஓமந்தை, வவுனியா.**
**077 441 8716**

(CS 26396)A-1


# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதிவரை டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் கிராமஅலுவலர் பிரிவு ரீதியாக டெங்கு களப் பரிசோதனைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கச்சாய், விடத்தற்பளை, மாசேரி, மண்டுவில், கல்வயல்,கைதடி மத்தி, கோவிலாக்கண்டி, சந்திரபுரம், மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் புதன்கிழமை பாலாவி, கெற்பேலி, இடைக்குறிச்சி, நுணாவில் கிழக்கு, நுணாவில் மத்தி, கைதடி தெற்கு, கைதடி நாவற்குழி, சரசாலை தெற்கு, மந்துவில் மேற்கு ஆகிய இடங்களிலும்,

அடுத்த வாரம் வியாழக்கிழமை கொடிகாமம் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, கரம்பைக்குறிச்சி, நுணாவில் மேற்கு, கைதடி தென்கிழக்கு,மறவன்புலவு, சரசாலை வடக்கு, மந்துவில் வடக்கு ஆகிய இடங்களிலும்,

அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை கொடிகாமம் மத்தி, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை, மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, கைதடி மேற்கு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் டெங்கு களப் பரிசோதனைகள் இடம்பெறும்.

காணிக் குடியிருப்பாளர்கள் காணிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை சேர்ப்பதற்கான இடங்களை தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது கிராம அலுவலரின் அலுவலகங்களில் அறிந்து கொள்ள முடியும் என்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ச-9)


## மரண அறிவித்தல்

### [கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்]

தோற்றம்
10
08
1944



மறைவு
27
09
2023

### பொன்னம்பலம் பரமேஸ்வரி

பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும், கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (27.09.2023) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.09.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 8736 881, 077 324 8165**

**இல.17, கல்லூரி வீதி,**
**மானிப்பாய்.**


# நூற்றாண்டு விழா காணும் 'காரைநகர்'

யாழ்ப்பாணம், செப். 28

'காரைதீவு' எனும் பெயர் 'காரைநகர்' என மாற்றப்பட்ட நூறாவது ஆண்டு நிறைவையொட்டி காரைநகரில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் காரைநகர் இந்துக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பொம்மலாட்டம், மங்கல விளக்கேற்றல் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து காரைநகர் விளையாட்டுக்கழகங்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சா.சுதர்ஷன், காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன், சமூகமட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-20)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

-இவ்வாறு சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியக் குழு தனது பயணத்தை முடித்துக் கொண்டுள்ள நிலையில் நேற்றுப் புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடினமான ஆனால் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவது பொருளாதாரத்தை நீடித்த மீட்சி மற்றும் நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பாதையில் கொண்டு செல்ல மிகவும் அவசியமானது.

வருவாய் திரட்டல், ஆதாயங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேம்பட்ட நிலையில், ஆண்டு இறுதியில் ஆரம்பக் கணிப்புகளைவிட கிட்டத்தட்ட 15 வீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் முயற்சிகள் இல்லாவிட்டால் நிதியைச் சரிசெய்தலின் பொறுப்பு பொதுச் செலவில் விழும். இது அத்தியாவசிய பொதுச் சேவைகளை வழங்கும் அரசாங்கத்தின் திறனைப் பலவீனப்படுத்தலாம்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் வெளிக் கடனாளிகளுடன் விவாதங்களை முன்னெடுப்பதன் மூலம் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் அதிகாரிகள் முன்னேறியுள்ளனர். இலங்கை நிலுவையில் உள்ள தனது பொதுக் கடனை மறுசீரமைத்து வருவதால் முதல் திட்ட மதிப்பாய்வின் நிர்வாக சபையின் ஒப்புதலுக்கு நிதியளிப்பு உத்தரவாத மதிப்பாய்வுகளை நிறைவு செய்ய வேண்டும். இந்த நிதியுதவி உத்தரவாத மதிப்பாய்வுகள் கடன் மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதில் கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-இ)

## கஞ்சா...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடந்த விசேட கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் அதில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதையடுத்து இந்த விடயத்தை ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர், பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள், ஜனாதிபதியின் வடமாகாண ஒருங்கிணைப்புச் செயலாளர் எம். இளங்கோவன், பிரதேச செயலர்கள், நீரியல்வளத்துறை அதிகாரிகள், வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில், குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. அங்கு பொலிஸ் காவலரண்கள், இராணுவக் காவலரண்கள் இருந்தும் மணல் அகழ்வைத் தடுக்க முடியவில்லை. மணல் அகழ்வை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸ் ரோந்து நடவடிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகள் பதிலளித்த நிலையில், அங்குள்ள சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்ற விடயம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தால், அந்த விடயம் உடனடியாகவே மணல் கடத்தல்காரர்களுக்குத் தெரிய வருகின்றது. சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்த போதும், தற்போதுவரை சட்டவிரோத மணல் அகழ்வு இரவு, பகலாக நடந்து கொண்டிருக்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்டரீதியான அனுமதி பெற்று மணல் அகழ்வு மேற்கொள்பவர்கள் சட்டவிரோதமாக மணல் அகழ்பவர்களுடன் சேர்ந்து செயற்படுவதில்லை. சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் என்று இனங்காணப்பட்டவர்கள் அங்குள்ள பொது அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான மணல் அகழ்வு அனுமதியைக் கொண்டு மணல் அகழ அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால், அவர்களையும் இணைத்து மணல் அகழ்வில் ஈடுபடவேண்டும் என்று அங்குள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேரடியாகவே மிரட்டல் விடுத்துள்ளார். அவ்வாறு செய்யாவிட்டால் கஞ்சா வழக்கில் கைது செய்வேன் என்றும் மிரட்டுகின்றார் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணித்தார். அச்சுறுத்தல் விடுத்தார் என்று கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று இனங்காணப்பட்ட இடங்களில்பொலிஸ்காவலரண்களை அமைக்கவும், இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்படும் முன்னேற்றம் தொடர்பாக 10 நாள்களின் பின்னர் ஆராயப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ-எ-26)

## தேடியது...

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் இந்த அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று மூன்றாவது நாளாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், படைத்தரப்பால் எதுவும் மீட்கப்படவில்லை. சுமார் 13 அடி ஆழம் வரையில் அகழப்பட்ட நிலையில், நீர் வர ஆரம்பித்ததால் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர் வெளியேற்றப்பட்டது.

மாலை 5.30 மணிவரை அகழ்வுப் பணிகள் நடைபெற்ற நிலையில், அகழப்பட்ட இடத்தை மூடுமாறு நீதிவான் உத்தரவிட்டார். அகழ்வுப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டன.

அதேவேளை, இந்த அகழ்வு நடவடிக்கைக்காக 15க்கும் மேற்பட்ட பனை வடலிகளும், அந்தப் பகுதியில் நின்ற நாவல் மரமும் அகற்றப்பட்டுள்ளன. (அ-எ-19)

## தேர்தல்...

நடத்தப்படவேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளதாவது:-

உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படுவதும், அதை நீதியாகவும், நியாயமாகவும் நடத்துவதும் மனித உரிமையாகும். அரசமைப்பிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது மனித உரிமை மீறலாகும். உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மனித உரிமை ஆணைக்குழு இருக்கின்றது.

அதேவேளை, சமூக ஊடகங்கள் கண்காணிப்பு என்ற போர்வையில் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான முயற்சி இடம்பெறுமானால் அது பாரதூரமான விடயமாகும். இந்த விவகாரம் தொடர்பில் எமது பரிந்துரைகள் முன்வைக்கப்படும் - என்றார். (அ-எ-44)

## கர்ப்பப்பை...

கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி பிரசவத்துக்காகத் தனது மனைவி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும், மறுநாள் 27ஆம் திகதி சத்திரசிகிச்சை மூலம் குழந்தை இறந்த நிலையில் எடுக்கப்பட்டது என்றும், அதன் தொடர்ச்சியாக மனைவியின் கர்ப்பப்பை அகற்றப்பட்டது என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தனது குழந்தை இறப்பதற்கும், மனைவியின் கர்ப்பப்பை அகற்றப்பட்டமைக்கும் மருத்துவர்களின் தவறே காரணம் என்று அவர் நேற்றுமுன்தினம் பதிவு செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-எ-214)

## ஆய்வுக்காக...

நிலையில், சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப நீதிமன்று கட்டளை பிறப்பித்தது.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி ஒருவரின் இடதுகையின் மணிக்கட்டுக்குக் கீழ் அகற்றப்பட்டது.

சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு விடுதியில் கடமையில் இருந்தவர்களின் அலட்சியமும், தவறுமே காரணம் என்று சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீட விசேட உடற்கூற்று நிபுணர் ஒருவர் ஊடாக உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் கோரியமைக்கு அமைய நீதிமன்றம் கட்டளையிட்டது.

பெயர் குறிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.அ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சிறுமியின் சார்பாக சட்டத்தரணிகள் சர்மினி பிரதீபன், லக்சன் செல்வராஜா ஆகியோர் முன்னிலையாகினர். (அ-எ-26)

## மாகாணத்தின்...

ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனைக் கட்டடத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார்.

'இது மாகாணத்தின் அதிகாரங்களை மத்திக்கு வழங்குவதற்கு ஒப்பானது. நாம் மாகாண அதிகாரங்களை கோரிவரும் நிலையில், ஏற்கனவே உள்ள அதிகாரங்களை மத்திக்கு வழங்குவதை நாம் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண ஆளுநர்,' யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் கிளினிக் ஒன்று தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்குகின்றது. அந்தக் கட்டடத்தை மீள வழங்கவேண்டும் என்று கட்டட உரிமையாளரால் கோரப்படுகின்றது. அதையடுத்து அந்த விடுதியைத் தற்காலிகமாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக் கட்டடத்துக்குச் கொண்டு செல்வதற்கான கோரிக்கை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்தக் கோரிக்கைக்கு நான் இன்னமும் பதிலளிக்கவில்லை.

ஆனால் வடக்கு மாகாண அதிகாரங்கள் மத்திக்கு கையளிக்கப்படுகின்றது என்று சில ஊடகங்கள் விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்கின்றன. அது முற்றிலும் பொய்யானது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் என்னை நேரில் தொடர்பு கொண்டு விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்' என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, 'அனைத்து மக்களுக்குமாகவே மருத்துவசேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மருத்துவமனையில் தற்போது நெருக்கடியான சூழ்நிலை காணப்படுகின்றது. குறுகிய இடத்தில் அதிகமான நோயாளர்களைப் பராமரிக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டே நாம் இந்தத் தீர்மானத்தை எடுத்தோம். எமது இந்தக் கோரிக்கை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுமாயின் எமது கோரிக்கையை நாம் மீளப் பெறுகின்றோம்' என்று குறிப்பிட்டார்.

அப்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண அவைத் தலைவர், 'மருத்துவர்களைப் புண்படுத்தும் நோக்கில் இந்தக் கருத்து வெளியிடப்படவில்லை. அவர்களின் சேவையை மதிக்கின்றோம். கொரோனா காலத்தில் அவர்கள் செயற்பட்ட விதம் பாராட்டுக்குரியது. மாகாண அதிகாரம் தொடர்பான விடயம் தமிழ் மக்களின் உணர்வோடு ஒன்றிணைந்த விடயம். இதுதொடர்பில் அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும் என்றே கோருகின்றோம்' - என்றார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வருடாந்த செயலாற்றுகை துணுக்காய் வெண்கலம்!

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை தொடர்பில் சிறந்த பெறு பேற்றை வெளிப்படுத்தி துணுக்காய் பிரதேசசபை வடக்கு மாகாணத்தில் மூன்றாமிடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கியுள்ளது.

இலங்கை பொது நிதிக் கணக்குகள் சங்கத்தால் வடக்கு, கிழக்கு, வடமத்தி, ஊவா மாகாணங்களிலுள்ள உள்ளூ ராட்சி மன்றங்களிடையே இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கேட்போர் கூடத்தில் கடந்த வாரம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாண உள்ளூ ராட்சி மன்றங்களுக்கிடையே சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தி துணுக்காய் பிரதேசசபை மூன்றாமிடம் பிடித்துள்ளது. (ச)

## மட்டக்களப்பில் தொடர்ச்சியாக காணி அபகரிப்புக்கு எதிராகப் போராட்டம்

மட்டக்களப்பு, செப். 28

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை போன்ற பிரதேசங்களில் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுவரும் நிலையில், இந்தக் காணி அபகரிப்புக்கு எதிராகத் தொடர்ந்து 12ஆவது நாளாக நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பில் தொடர்சியாக இடம்பெற்றுவரும் காணி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும். தமிழ் மக்கள் அவர்களின் பூர்வீக நிலங்களில் வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்படவேண்டும். பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ம-213)

## வடக்கில் கன மழை பொழியும் சாத்தியம்

யாழ்ப்பாணம், செப்.28

வடக்கு மாகாணத்தில் அடுத்துவரும் நாள்களில் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி வங்காள விரிகுடா கடலில் அந்தமான் தீவுக்கு வடக்கே தாழமுக்கம் ஒன்று உருவாக வாய்ப்புள்ளது. இதனால் நேற்று முதல் எதிர்வரும் 2ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் மிதமானது முதல் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நாளை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கடற்பரப்புக்கள் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால் மீனவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (எ-66)

# தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், செப்.28

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றக்கோரியும், பொதுமக்களின் காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வலியுறுத்தியும் இன்று மாலை 4 மணியளவில் விகாரைக்கு அண்மையில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டம் நாளை இரவு 7 மணிவரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-66)

## அனுமதி...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடந்த விசேட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் தற்போது சேவையில் ஈடுபடும் ஒரு தனியார் முச்சக்கரவண்டிச் சேவை தொடர்பாகப் பிரஸ்தாபித்தனர்.

அந்தத் தனியார் நிறுவனத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் குறைந்த கட்டணத்தை வசூலிக்கின்றன என்றும் அதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது எனத் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டிகளுக்கு "மீற்றர்" பொருத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு பணம் செலவிட்டு தாங்கள் மீற்றர் பொருத்திவரும் நிலையில், தனியார் நிறுவனத்தின் சேவை தங்களுக்கு வருமான இழப்பை ஏற்படுத்துகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அவர்களுக்குப் பதிலளித்த யாழ்ப்பாண மாவட்டச் செயலர், பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் "மீற்றர்" பொருத்தவேண்டும் என்பது சட்டம். அதில் எந்த மாற்றமும் செய்யமுடியாது. அதேவேளை, உரிய அனுமதி பெற்று மேற்கொள்ளப்படும் தனியார் நிறுவன பயணிகள் சேவையை தடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை என்று பதிலளித்தார்.

"மீற்றர்" பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் தொடர்பிலும் பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர். மீற்றர் கட்டணத்துக்கு அதிகமாகச் சிலரால் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. ஆயினும், தனியார் முச்சக்கர வண்டிச் சேவை தொடர்பாக இதுவரை எந்த முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் "மீற்றர்" பொருத்தாத குற்றச்சாட்டின் கீழ் 800 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர். (அ-எ-26)

## சட்டவிரோதக்...

கடற்றொழில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூர் சட்டவிரோதக் கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 468 மீனவர்கள் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிராக 203 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டன. குற்றப்பணமாக அவர்களிடம் இருந்து 66 இலட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டுள்ளது. ஒரு படகும், படகு இயந்திரமும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. 106 படகுகள் உரிமைகோரல் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளன - என்றார். (அ-எ-26)

## வல்லிபுர...

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், நாளைமறுதினம் சனிக்கிழமை காலை கேணித் தீர்த்தத் திருவிழாவும், மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் கொடியிறக்கத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர். (அ-எ-66)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பரணம் பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 5 பரப்பு 3.5 குழி காணியுடன் பாரிய களஞ்சிய வசதி அமையப்பெற்ற காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு இல: 077 3866 250

**A/L Zoom Classes**

Biology / Chemistry - Group / Individual
தமிழ் மூலம் /English Medium
077 807 5566 (Jaffna Lecturer)

**மணமகள் தேவை**

யாழ். இந்து சமயத்தைச் சேர்ந்த (V) அவுஸ்ரேலியாவில் எஞ்சினியராக கடமைபுரியும் 1976 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு பெற்றோர். அழகிய படித்த மணமகளை (உள்நாடு / வெளிநாடு) எதிர்பார்க்கின்றனர். இவர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்

077 265 9883

**மணமகள் தேவை**

1982 இல் பிறந்த 8 இல் செவ்வாயுள்ள முகாமைத்துவப் பட்டதாரி, தனியார் துறையில் பணிபுரியும் சைவபோசன மணமகனிற்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
(அசைவ போசனமும் ஏற்றுக்கொள்ளப்படும்)

077 977 3277, 077 115 5279

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org